1994 ஏப்ரல் 22]

எடுக்கும்பொழுது அந்த சீட்டிலே உள்ள ரெக்ஸின் கிழிந்து விடுகிறது. இதற்கு என்ன வழி செய்யலாம் என்று அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற நிலையில் இருக்கிறது என்பதைத் தான் அரசு கருத்திலே கொண்டு லக்கேஜை - பொது இருக்கைகளை அகற்றி விட்டு அதிலே லக்கேஜ் போட்டுக் கொள்ளலாம் என்ற நிலையை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். ஆகவே பாதி இருக்கைகளில் மட்டும்தான் அவர்கள் அமர்ந்து கொள்ளலாம். பாதி இருக்கையிலே எந்தெந்தப் பகுதியிலே லக்கேஜ் எடுத்து வருகிறார்களோ அதிகமாக அந்த இடங்களிலேயெல்லாம் பாதி இருக்கைகளை மாற்றிவிட்டு அந்த இருக்கைகளுக்குப் பதிலாக லக்கேஜை வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

முற்பகல் 10.15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பல்லவா, அதைத் தள்ளவா?' என்ற நிலைமை மாறி, 'பல்லவா, அது நல்லவா' என்று சொல்கிற அளவுக்கு, நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, பஸ்கள் எல்லாம் மிக நன்றாக இருக்கின்றன. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில், எத்தனை பஸ்கள் தற்போது ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பல்லவா, கொஞ்சம் தள்ளவா?' என்ற நிலைமை மாறி, இப்போது, 'பல்லவா, கொஞ்சம் மெள்ள வா' என்ற நிலைமை வந்துகொண்டிருக்கிறது. உறுப்பினர் சொல்வது வேறு, 'மெள்ள வா' என்று சொல்கிற அளவுக்கு இன்றைக்கு நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது. அதிலே 1,090 பஸ்களை இயக்கிக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 345, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

345—

திருவையாறு தொகுதியில் அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தி கரைகளை வலுப்படுத்தும் திட்டம்.

***15184*—திரு. ப. கலியபெருமாள்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தி கரையை வலுப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால், திருவையாறு தொகுதியிலுள்ள பல ஏரிகள், மேடிட்டுப் போன காரணத்தினாலும், அங்கு கரைகளைச் சரியாக வலுப்படுத்தாத காரணத்தினாலும், கடந்த புயல், வெள்ளக் காலங்களில், அவை எல்லாம் உடைந்து, சேதங்களை உருவாக்கி விட்டன. இந்த ஆண்டில், அவற்றையெல்லாம் சீரமைக்க, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளையும், 1992-93 ஆம் ஆண்டில் ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று கேட்டிருக்கிறார். அனைத்து ஏரிகளையும், ஒரே ஆண்டிலேயே பராமரிக்கின்ற பணிகளைச் செய்வதற்கு இயலாது என்பதைத்தான் நான் தெரிவித்தேன். புயல், வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தமட்டில், ஏற்கனவே நம்முடைய அரசின் சார்பில், உடைப்புகள் எல்லாம் அடைக்கப்பட்டன. இப்போது சில ஏரிகளிலே கரைகளைப் பலப்படுத்துகிற பணிகள், மாநிலத்திலே பல்வேறு இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், அவருடைய தொகுதியிலும், நிவாரணப்பணிகள் நடைபெற்றிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதிலே ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால், சில இடங்களில் கரைகளைப் பலப்படுத்தாமல், ஏரிகளை ஆழப்படுத்தாமல் இருக்குமேயானால், அரசினுடைய கவனத்திற்கு அவர் குறிப்பிட்டுக் கொண்டு வரவேண்டும். ஏனென்றால், தொகுதி முழுவதும் என்று சொன்னால், அனைத்து ஏரிகளையும், எல்லாவற்றையும், கணக்கிலே எடுக்க முடியாது. எந்தெந்த ஏரிகள் மோசமான நிலையில் இருக்கின்றன; எவையெவை உடைப்பட்டு இருக்கின்றன என்று குறிப்பிட்டுத் தெரிவித்தால், அவற்றையெல்லாம் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடலில் தத்தளிக்கும் உயிர்களைக் கரையேற்றி வரும் காவியத் தோணி, தன்னை நம்பிய யாரும் வெம்பி விடாமல் ஏற்றிவரும் ஏணி, ஆறு

1994 ஏப்ரல் 22]

கோடி மக்களின் ஆதாரம், அநீதியை அழிக்க வந்த புரட்சி அவதாரம், எங்களின் சுவாசம், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆசி மலர்களால் அங்கீகரிக்கப்பட்ட, புதுமைப் பணியால், புரட்சி எற்படுத்தும் பொதுப்பபணித் துறை அமைச்சர் அவர்களே, மகாபாரதத்தில் கண்ணன் தேரோட்டி வெற்றித் தேடித்தந்தான். தமிழக இரதத்தை, தலைவியின் தலைமையிலே செலுத்தும் தேரோட்டியாக, அதனை திறம்பட செயலாற்றிச் செலுத்தி, இதயம் நினைப்பதை உதயம் பார்க்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களே, என்னுடைய தொகுதியில்-ஆயிரம் கோடி உலக வங்கித் திட்டத்தில் கடன் பெற்று, ஏரி, குளங்கள், வாய்க்கால் வரப்புக்கள் இவற்றையெல்லாம் சீரமைக்கும் திட்டத்தை நான் வானொலியில் கேட்டேன்— அப்படிப்பட்ட திட்டத்தில், இந்த ஆண்டு ஏரிகளைச் சீரமைக்க, வெற்றியைத் தேடித் தருகின்ற புரட்சித் தலைவியின் தலைமையிலே, அவர் சொல்பவற்றைச் செயலாக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். **கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. கலியபெருமாள் அவர்களுடைய தொனியும், பாணியும் இன்று ஒரு புதுமையாகத்தான் இருக்கிறது. வழக்கத்திற்கு மாறாக, இன்றைக்குப் புதுமையாகப் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், என்னதான் பேசினாலும், நிதியாதாரங்கள் இருந்தால்தான் செய்ய முடியும். மனம் இருக்கிறது; ஆனால், பணம் இல்லை. நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்களுக்கு எல்லா காரியங்களையும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிற அனைத்துக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்ற நல்ல மனம் இருக்கிறது. ஆனால், பணம் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால்தான், சில பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, ஆண்டுக்காண்டு செய்து வருகிறோம். நம்முடைய உறுப்பினர் திரு. கலியபெருமாள் அவர்கள் மூத்த உறுப்பினர்; மிகப் பெரிய திராவிட இயக்கத்திலே இருந்தவர். ஆகவே, அவருடைய தொகுதியிலே பணிகள் தடைப்பட்டுப் போவதை—நம்முடைய ஒப்பற்ற புரட்சித்தலைவியினுடைய ஆட்சியிலே அவையெல்லாம் தடைபடாது— ஆகவே, அவர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஏனென்றால், மொத்தமாக எல்லா வேலைகளையும் எடுத்துச் செய்ய இயலாது. எந்தெந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்று அவர் குறிப்பிட்டுக் கேட்கிறாரோ, அந்தப் பணிகளை அவர் எழுத்துமூலமாக எனக்குத் தந்தால் அந்தப் பணிகள் செய்யப்படும். இந்த உலக வங்கி திட்டத்தைப் பொறுத்தமட்டிலே கண்மாய்களை சீரமைக்க முடியாது. புதிய திட்டங்களுக்காக தனியாக வைத்திருக்கிறோம். ஏற்கெனவே வருகின்ற நிதி கால்வாய்களைப் பலப்படுத்தவும், பெரிய அணைகளைக்

கட்டுவதற்கும், அதுபோன்ற செயல்களைத்தான் செய்ய முடியும் டபில்யூ. பி.ஆர்.சி.பி. என்ற திட்டத்தின் கீழே. ஆனால் இப்பொழுது மத்திய அரசு கொடுத்திருக்கின்ற திட்டத்தின் கீழேதான் இந்தக் கண்மாய்களைச் சீரமைக்க பணம் கேட்டிருக்கிறோம். அது உலக வங்கி அனுமதி பெற்று பணம் வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகும். இப்பொழுது, மாநில அரசு நிதியாதாரங்களை வைத்து செய்யக்கூடிய பணிகளைச் செய்கிறோம். அதற்கு அவர் எழுத்து மூலம் தந்தால் முன்னுரிமை கொடுத்து சில பணிகள் எடுத்து அவர் தொகுதியிலே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 346, திரு ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

346—

விக்கிரமசிங்கபுரம் பாபநாசம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து திருவனந்தபுரம் செல்ல நெடுஞ்சாலை அமைத்தல்.

20460—திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், விக்கிரமசிங்கபுரம் பாபநாசம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டங்கள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பாபநாச மலையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு செல்லும் சாலை மிகவும் முக்கியமானச் சாலை. நான் சட்டமன்ற உறுப்பினரான காலத்திலேயிருந்து, மூன்று ஆண்டுகாலத்திலே நான் பல தடவை இந்த மன்றத்திலே நினைவுபடுத்தியிருக்கிறேன். இதற்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும், இந்தச் சாலைப் பற்றி, அதைக் கண்டிப்பாகப் போட வேண்டுமென்ற முறையிலே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள்.